தமிழ் நாடு சட்டமன்ற மேலவை.

(இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்கீழ் அமைக்கப்பட்ட தமிழ்நாடு சட்டமன்ற மேலவையின் அறுபத்தி ஐந்தாவது கூட்டத்தொடர்.)

செவ்வாய்க்கிழமை, 1984 மார்ச் 13.

மாசி 30, ருத்ரோத்காரி, திருவள்ளுவராண்டு-2015.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள மேலவை மண்டபத்தில், முற்பகல் 9-30 மணியளவில் மாண்புமிகு மேலவைத் தலைவர் (டாக்டர் ம. பொ. சிவஞானம்) அவர்கள் தலைமையில் அவை கூடியது.

1. வினாக்கள்-விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

Trainees in Teacher Training Institute.

* 82 *Q.*—DR. T. R. JANARTANAM (on behalf of THIRU P. R. Thomas) : Will the Hon. the Minister for Education be pleased to state :

(*a*) whether it is a fact that the Trainees in the Teacher Training Institutes in Madurai and Ramanathapuram Districts were on fasting on 19th September 1980 in front of the Office of the Chief Educational Officer, Madurai ; and

(*b*) if so, the action proposed to be taken on their demands?

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : (அ) ஆம்.

(இ) கோரிக்கைகள் பரிசிலிக்கப்பட்டு, நிராகரிக்கப்பட்டு விட்டன.

குடும்ப ஓய்வூதியம்.

* 83. வினா—டாக்டர் இரா. சனார்த்தனம் (திரு. க. மீனாட்சிசுந்தரம் சார்பில்) : மாண்புமிகு கல்வி அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

ஆசிரியர்கள் குடும்பங்களுக்கு வழங்கப்படும் குறைந்த பட்ச குடும்ப ஓய்வூதியத்தை மேலும் உயர்த்தி வழங்கும் எண்ணம் அரசுக்கு உள்ளதா ?